குட்டிப்பார் தேகமது குழைந்து காணும்
திருவான தேகமது கற்பூரம் வீசும்
வெட்டிப்பார் தேகமது அசையா தய்யா
ஒருகோடி பகைக்கும் ஒருமெய்யாய் நிற்கும்
திட்டாத அபமிருத்துவும் தட்டிப் போகும்
தயவான பூரணத்தின் தன்மை தானே. 770

தானென்று மானென்றும் வேறுண்டோ சொல்
தானவனாய் நின்றதடா மூல வன்னி
கோனென்ற திருவான வன்னி தன்னை
கூர்மையுடன் கண்டவனே தானாய் நின்றான்
தேனென்ற அமிர்தமது அருவி பாயும்
தெவிட்டாத அமிர்தமது தெய்வம் தெய்வம்
வீணென்று தெய்வமதைச் சொன்னா ரானால்
வினைதெறிக்கும் வினைதெறிக்கும் மெய்சொன் னேனே 771

சொன்னதொரு யென்னுக்கான் மைந்தா கேளு
அருவமுள்ள ஆயாத்தி ருந்தா ராகும்
முன்னோர்கள் மொழிந்ததொரு ஞானக் கல்லாம்
முகமான திருஞானம் யென்னுடைய மைந்தா
கண்ணான கண்மணிபோ லின்னான் தன்னை
காட்டாதே மானிடர்க்குக் காட்டி னாக்கால்
விண்ணோர்கள் சாபமது யீவார் யீவார்
விசையுள்ள புலத்தியனே யன் ஞானக்காட் டாதே. 772

நூல்காட்ட வேணுமென்ற சித்தர் கூடி
நுணுக்கமில்லா நுணுக்கமது செய்தா ரானால்
நூல்காட்டி அவர்களுக்கு நன்மை சொல்லி
நாட்டமில்லா பெயர்களை மாற்றமே செய்வாய்
கால்காட்டும் கேசரமாம் ஆதாரத்தைப் பாரு
காலையமாம் ஆதாரத்தை கருத்தாய்ப் பாரு
செயல்காட்டுமென் (சுமாது கற்பம் தீட்சைபாருங்)
சிவசிவா யென்னுடைய தோணம் பாரே.

773

பாரப்பா அண்டபதி நீண்ட மெல்லாம்
பண்பாக பூரணத்தி லொடுங்கு மப்பா
ஆரப்பா அறிவார்கள் பூரணத்தின் நேர்மை
அரகரா திசைநாதம் ஆர்தான் காண்பார்.
காரப்பா மூலமதின் கருத்தை வைத்து
கமலமென்ற ஆதாரத்தி னிலைப் போத்தி
தேறப்பா தெரிந்துகொண்டு அடுத்தாப் போல்
சிவசிவா கயிலாச தேக மாமே.

774

தேகமென்ற அகமறியார் சித்தர் கோடி
திகைவேடம் காணாத திருட்டு சித்தர்
~~ஆகம~~
ஆகமென்ற நூல்முறையைப் படித்துக் கொண்டு
அனைவார்கள் வாய்புலம்பி அருளைக் காணார்
பாகமென்ற அனையறியார் பாதகர்கள் மெத்த
பாவறியாய் பாவறிந்தும் பாவி மார்கள்
யேகபர வஸ்த்துவென்பார் யேகமென்பான
யெட்டும்நெஞ்சும் அறியாத இருடர் தானே.

775

தானென்ற தத்துவத்தை அறியார் மூடர்
தன்மையென்ற சொல்லறியா ததுகு நம்பர்
நானென்ற மதமேதான் பேசி பேசி
நல்லோரை தான்பழிக்கும் நலமில் லாதார்
கோனென்ற சிற்குருவை யறியார் தானும்
கூகாமல் சிறாய வெறியான் மைந்தா
ஆணென்றும் பெண்ணென்றும் அறியா மலத்தான்
அகம்படைத்த மட்டிகளை அடுத்தி டாதே. 776

அடுத்தவனை முப்பூவின் விபரங் கேளப்பா
அதன்பாகு வேதைமுகம் தென்ன வென்பான்
நடுத்திரமா சிற்குருவை பார்வமாய் கேள்ப்பான்
நலமான செந்தூர முறையைக் கேள்ப்பான்
கருத்ததொரு மெழுகுவகை யென்ன வென்பான்
கருவான சுத்தி வைப்பு முறைதான் கேள்ப்பான்
வருத்தமிகச் சொல்லாட்டான் போம்போ மென்பான்
விதியுண்டால் வருமென்று எண்ணான் பாரே. 777

எண்ணமன் எண்ணியெண்ணி மனது நொந்து
இடிந்துமிகக் கரைந்ததொரு பாவி மார்கள்
கண்ணான கண்பார்த்து கனத்தை தாண்டி
கற்பூர தீபமதில் கருத்தை வைத்து
பண்ணான தேசுக பூசையும் பண்ணி
பதிவான இம்பகத்தின் பதிய மாட்டார்
தன்னான தன்பெருமை தனையே யெண்ணி
தானவனா மென்றதனை தனைக்கா ணாரே. 778

காணாமல் கருத்தழிந்த மடையர் கோடி
கர்மம்வினை தீராத கழுதை மாண்பர்
வீணான வாய்மொழிகள் மெத்தப் பேசி
வேதமென்ன சித்தாந்த மென்ன வென்பான்
கோணான இருபத்தை காணார் மந்தர்
குவளையத்தில் மெத்தவுண்டு கண்டு தேறு
தேனான மதியமுர்தம் பானம் பண்ணு
திறமான சிந்தையதாய் ஞானம் பாரு.
779

ஞானமென்ன புருவமய்யம் நெத்தி பாரு
நெத்தியொளி பிரகாசஞ் சோதி சோதி
மானமென்ன பிரணவமே நாதம் நாதம்
முக்காலும் நாதமதில் விந்து விந்து
பானமென்ன நாதவிந்து ரெண்டுங் கூடி
பாரஞ்சுவிடம் பரமான பூரணமே யாகும்
வானமென்ன அந்திரத்தில் நாத ஓசை
மகத்தான ஓசையடா நாத மாமே.

தாளகக் கட்டு. 780

நாதமென்ன தாளகத்தின் கட்டுச் சொல்வேன்
நலமான விந்துவிட நாதஞ் சேர்த்து
பாதமென்ற அடிமுடியாய் கூடச் சேர்த்து
பாங்கான வெடியுடனே காரஞ் சேர்த்து
நீதமென்ற பழச்சாத்தில் கல்வத் தாட்டி
நிசமான தாளகத்துக் காங்கி பூட்டி
வாதமென்ற பிருதிவியாய் சீனை செய்து
வஞ்சுவாக ரவிமுகத்தில் உலத்தி பாயே.
781

உலர்ந்ததொரு சுவசமது நன்றாய் காய்ந்தால்
உத்தமனே யெருவடுக்கி புடத்தைப் போடு
அலைந்துமிகப் புடமாறி யெடுத்துப் பாரு
அப்பனே தானெகந்தான் நவலோகக் கட்டும்
தீர்ந்துமிக வொடாது சொல்லக் கேளு
தின்மையுடன் னாதநீர் விட்டு ஆட்டி
மலர்ந்ததொரு காரியத் தகட்டினைப் பூசி
மைந்தனே சூட்டினில்வைத்து சீலை செய்யே.

782.

செய்யப்பா யெருவடுக்கிப் புடத்தைப் போடு
செம்மையுள்ள தகடதுவும் நீறிப் போகும்
மெய்யப்பா சொல்லுகிறேன் பற்பந் தன்னை
மேகமென்ற ரோகத்துக் கிதுதா னீ
வையப்பா மேகமெல்லாம் பறந்து போகும்
பற்பத்தின் செயந்தனை பகுக்க கேளு
வையப்பா ரசமதனை சுத்தி செய்து
வாகாக கல்வத்தி லாட்டி டாயே.

783

உத்தியதோர் ரசமதனில் பத்துக் கொன்று
உத்தமனே பற்பமது ஒன்று போட்டு
நேத்தியே வாய்நீரை விட்டு ஆட்ட
நிலைசிவா ரசமதுவும் வாணை யரச்சு
போத்தியே வாணைரசம் பதனம் பண்ணி
புத்தியுடனே கைமுறையைப் புகலக் கேளு
வாழ்த்தியே பரிக்கட்டின் துவி நன்றாய்
வரிசையுடன் புடம்போட வளமை கேளே.

784

கோனப்பா வட்டமதாய் ஏடு தட்டி
கெணிதமுடன் சொக்கவென்ற பொடிய ரப்பி
தானப்பா தகடுவைத்துப் பொடிய ரப்பி
தன்மையுடன் மேலோடு தயவாய் மூடி
மூனப்பா யெருவடுக்கி அனலை மூட்டி
முக்காலும் அத்திவந்து முன்னே நின்று
ஆனப்பா அன்பாகப் போற்றி நின்று
அனலாறி யெடுத்துப்பார் குருவாய்ப் போமே.
785

குருவான பரித்தகட்டை யெடுத்துப் பாக்கில்
குருபரமாம் விந்துவென் றொத்த மாகும்
பருவமுடன் உடைத்திடவே நொறுங்கிப் போகும்
பரமான குருவைப்பார் பதனம் பண்ணு
திருவான செம்பிலே சேர்த்துக் கொண்டு
செம்மையுடன் கொடுத்திடவே நன்மை யாகும்
கருவான வெள்ளியிலே சேர்த்துக் கொண்டு
கணக்காகக் கொடுத்திடவே வணக்க மாமே.
786

வணக்கமுடன் குருவையொரு பணந்தான் தூக்கி
மகத்தான வெள்ளிசெம்பு கணக்காய்ச் சேர்த்து
யிணக்கமுடன் கொடுத்திடவே மாத்துப் பத்தா
யிருக்குமடா புவத்திலே யிணங்கிப் பாரு
தினக்கிமிது கிடைத்தபொருளென்றே நீயும்
தானிருக்கும் ஒடுக்கமதில் பதனம் பண்ணி
மணக்கிமிது பொருள்தனையே சிவயோ கிக்கும்
மனமகிழ்ந்து குருபூசை மனதாய்ச் செய்யே.
787

செய்வதுதான் மனதுருமை யாக வேணும்
சிவபூசை குருபூசை செய்ய வேணும்
தெய்வமென்ற சிவயோகத் திருக்கு மைந்தா
சிந்தைமனந் தொன்றாக நடக்க வேணும்
சைவமென்ற நெறிதனிலே நிற்க வேணும்
சங்கல்ப்ப விகல்ப்பமென்பார் தள்ள வேணும்
மெய்வழுவாய் மனதொத்து நடக்க வேணும்
மேல்வரம்பு கீழ்வரம்பு மெய்யிற் காணே
788

காணப்பா உலகத்தோ டொத்து வாழ்ந்து
கமலமென்ற ஆதாரத்தின் மலருக் குள்ளே
தேனப்பா போலவுமே அமுர்தம் நிற்கும்
சிவசிவா அமுர்தமதைக் கொள்ள வென்றால்
உணப்பா மூலமதில் மனத்தை வைத்து
உறுதியுடன் ரேசக பூரகமும் பண்ணி
தானப்பா கும்பகத்தில் தனதாய் நின்று
தின்பசிதா னறமட்டும் அமுர்தங் கொள்ளே
789

கொள்ளப்பா அமுர்தமதைக் கையால் வாங்கி
இணமைக வடியவென்று இருப்பாக் கொண்டு
மெள்ளப்பா பூரணத்தின் மனத்தை நாட்டி
மேலாதாரத்தின்நின்ற அடவைப் போற்றி
செல்லப்பா போதகத்தில் நின்று கொண்டு
நயமய நினைந்துநீ சொன்னா யானால்
சி

கொள்ளப்பா அமுர்தமதைக் கையால் வாங்கி
குணமாக வழியதனின்று குறிப்பாக கொண்டு
மெள்ளப்பா பூரணத்தின் மனத்தை நாட்டி
மேலான நாத்தின்நின்ற அடவைப் போற்றி
செல்லப்பா போதகத்தில் நின்று கொண்டு
செகத்திலுள்ள மானிடர்தன் சோனையைப் பார்த்து
விள்ளப்பா திவ்யவசி யென்று சொன்னால்
மெய்யதுள்ள வினைகளெல்லாம் விலகிப் போமே.
790

போமப்பா பூரணத்தின் மனத்தை வைத்து
பொறுமையுடன் தேகத்தான் பூரகத்தைப் பற்றி
நாமப்பா கும்பகத்தில் நின்று கொண்டு
நயமாக வென்றுநீ சொன்னா யானால்
தாமப்பா அத்துருவும் வசிய மாகும்
சகலகலைக் கியானமெல்லாந் தானே தோற்றும்
காமப்பால் கலவியிலே தம்பனத்தைச் சேர
கட்டாக நிஷ்டைமுறை கருத்தில் வையே.
791

வையப்பா வாசிதனை மூலத் தாட்டி
மகத்தான மூலமதாந் தேகத்தைப் பற்றி
செய்யப்பா ரேசகத்தான் கும்பத்தில் நின்று
செவிக்கிறது வசியதின் யென்று மாறி
வைய்யப்பா மங்கையர்மே லாசை கொண்டால்
பதறாது வித்துவது செயமாய் நிற்கும்
மெய்யப்பா யம்மொழியை வலகத் தோர்க்கு
விள்ளாதே இத்துவசும் செயமாய் நில்லே.
792

சத்துரு மாரணம்.

செயமாக சத்துரு மாரணத்தைக் கேளு
செப்புறேன் புலத்தியனே வென்று மாறு
பயமாகிச் சத்துருவும் மேயங்கிப் போவான்
பஞ்சதனி லக்கினிபோலப் பத்தும் பத்தும்
நயமாக மாரணிப்ப தாரை யென்றால்
நன்னோரைத் தாவணிப்போம் நன்மை யல்லோ
மெய்மான சிவதனத்தை அழித்தோர் தன்னை
மாரணிப்பாய் புலத்தியனே மனதிற் காணே
793

காணப்பா பூரணத்தைக் கண்டு பூசி
கைமுறையாய்க் கொண்டதினாற் காணும் சித்து
வீணப்பா வென்றுசொல்லி நினைந்தா யானால்
வேதாந்தஞ் சித்தாந்தம் ரெண்டுங் கிட்டார்
தா(ள)ணப்பா தாணவனாய்த் தேதாய்த் ______
தன்மையுள்ள பூரணத்தின் நன்மை யாவே
தாணப்பா துரும்பாகும் துரும்பு தானாம்
சொல்லாதே யன்னாதன்தன் இருதாளாமே.
794

இருளான மாயிருந்து யருளுயர் தன்னை
குறிப்பாக ஆதியந்தம் நின்றாய்ப் பார்த்தால்
அருளானமத் தெளிக்கச்ச யிந்திர சாலம்
தன்மையுள்ள மந்திரமாந் சித்து தானும்
வருளானாம் வாதமது அனந்தமாஞ் சொல்லும்
வாகுதியோன் செய்திடும் வகையாய்ச் சொல்லும்
கருளானாம் பன்னிரெண்டு சாநூங் காத்தி
கட்டாக வெட்டுடனே ~~[illegible]~~ னானைச் சேர்.
795

நாவான பூரணத்தில் நின்றா யானால்
நலுபங்காது வெட்டுறெண்டும் நென்றாய்ப் பேசும்
காவான வாசியது கட்டும் கட்டும்
கட்டாகும் தேகமது வச்சிர காயம்
மேலான தேகமப்பா பிரம்ம மாச்சு
மெய்யன் நின்ற வாசியது பரமாய்ப் போச்சு
தானான யிதழ்ப்பூவு மாறிய வாகும்
தயங்காமல் பூரணத்தைப் பூசை பண்ணே.
796

பூசையென்ன நேசமதா யருந்து கொண்டு
பூரணமே பராபரமாய் புத்தி யாகவே
ஆசையுடன் ரவிமதியை அன்பாய்க் கண்டு
அக்கினியின் கோத்திரமா யருளைப் போற்றி
நேசமுடன் ரவிமதியை மாறி மாறி
நினைத்தொரு அக்கினியால் நினைத்தா யானால்
பாசமென்ற தேகமது வெளுத்துப் போச்சு
பரமான தேகமதாய் நிலைக்க லாச்சே.
797

நினைக்கவே காயசித்தி பண்ணும் போது
நேராக வருபோது போசனந்தான்
மனைக்காமல் பச்சரிசி சிறுபயறுங் கூட்டி
வாகாக அமுதுசெய்து சக்கரை தேனுடனே
குனைக்காமல் வருபோது அமுது கொண்டு
குணமாக முப்பழமும் பாலுங் கூட்ட
கனைக்காமல் கற்பமதை கொண்டான் மைந்தா
காயசித்தி யுறுதியடா கருதிப் பாரே.
798

பாரப்பா யின்னமொரு பாகங் கேளு
பாலுண்ணியே பச்சரிசி பாகம் பண்ணி
நேரப்பா சக்கரையும் தேங்காய்ப் பூவும்
நேராகப் போட்டுநன்றாய்ப் பதமாய்க் கிண்டி
சேரப்பா கனிவகையும் கூடச் சேர்த்து
திறமாக வருபோது அமுது கொண்டு
காரப்பா கற்பமது கொண்டா யானால்
காயமது வச்சிரமா சித்துமாமே.
799

இத்தேக மதுயாருக்கு நல்ல சிவசிவா
தேகமது

வருணன் 141 17.12.80

சித்தேக மெய்யாருக்கு நல்ல ....
சிவசிவா தேகமது பரமா னந்தம்
பத்தென்ன மனதுருமை யாக வேணும்
பலருசியைத் தேடினதால் பலனே தீண்டு
கத்தென்ன கருமானங் கருவால் வெந்து
கருத்தோடே அநுபவித்தால் காணும் சித்தி
சித்தென்ன அதின்பிறகு யென்ன காணும்
சிவசிவா தேகமன்றோ சிவன்றன் றாமே. 800

ஊறாக யன்னமொரு வாரங் கேளு
இணமாக அமுதுபடி வாங்கி மைந்தா
நேராகத் துவரையுட பருப்புங் கூட்டி
நீர்தனிலே அமுதுசெய்து நெய்வாய்க் கேளு
சோறாகும் பருவமதில் தேங்காய்ப் பூவும்
சுகமாக சக்கரையும் நெய்யுங் கூட்டி
சோறாகக் கிண்டிநன்றா யாற வைத்தால்
திக்கெனவே யாறுகின்ற பதமாம் பாரே. 801

பதமான அமுதெடுத்து சருபோ துண்டு
பக்குவமாய் அதன்பிறகு கற்பங் கொள்ளு
மதமான மதங்களெல்லாம் அடங்கி நல்ல
மகத்தான தேகம்வச்சிர காய மாகும்
விதமான அஷ்டசித்தி யெட்டு மாகும்
விவேகமது தான்வருகும் வித்தை மாகும்
அதமான மனவிருத்தி யகன்டு போகும்
அநேகநாள் அம்பரத்தின் அருளைக் காண்பாயே. 802

காணப்பா அமுதுபடி சிமைத்துக் கொண்டு
கருத்துறவே கட்டுப்பு தொட்டுக் கொண்டு
பேணப்பா ஒருபோது அமுது கொண்டு
பிலமான கற்பமது கொண்டான் மைந்தா
தேனப்பா அமிர்தமது கசிந்து காணும்
தெவிட்டாத அமிர்தமதைப் பானம் பண்ணு
பூணப்பா இருபத்தை தொழுது கொண்டு
பொல்லாத மாய்கையெல்லாம் போக்கி
போக்கே. ௮௦௩

போக்கான அமுதுபடி அதனோடொக்க
புதுசான யோனிசி பொடித்துப் போட்டு
வாக்காக அமுதுசெய்து வெல்லந் தொட்டு
வளமாக ஒருபோது கொண்டான் மைந்தா
திரக்கான தேகமதும் வலுத்துப் போகும்
திண்மையுடன் கற்பமது சார்ந்து கொண்டால்
நோக்கான அமிர்தமது சொரிக்கும் பாரு
நரைதிரைகள் தானொழிந்து நலமாம் பாரே ௮௦௪

நலமாக யன்னமொரு பாகம் கேளு
நல்லதொரு அமுதுபடி வாங்கி மைந்தா
பிலமான சீரகமும் அத்தி பண்ணி
பெருமையுடன் நெண்டுமொன்றா படுத்து செய்து
இலமான வெல்லமதை தொட்டுக் கொண்டு
உண்மையுடன் ஒருபோது அமுது கொண்டால்
திணமான பித்தமெல்லாம் வெருண்டு போகும்
திரணிதனில் மன்மதன் போல் வாழ்வான் பாரே ௮௦௫

மூலச்சூடு போக அன்னம்.

பாரப்பா அமுதுபடி கொழிய வாக
பக்குவமாய்த் தானெடுத்து வைத்துக் கொண்டு
வாரப்பா கிரமந்தனைக் கியாழம் பண்ணி
வகையாகக் கியாழமதில் அமுது செய்து
தேரப்பா சர்க்கரையைத் தொட்டுக் கொண்டு
திறமாக அமுதுகொண்டால் தேகவச்சிர காயம்
காரப்பா மூலமென்ற தெல்லாம் போகும்
கட்டாக கற்பமுறை உண்டு தேறே.
806.

சேர்த்தபின்பு யன்னமொரு பாகங் கேளு
திறமாக பருத்திவிதைப் பாலு வாங்கி
சார்ந்தசம்பா அமுதுபடி சமைக்கும் போது
சக்கரைதேன் உடனிட்டு நன்றாய்ப் பாகம் செய்து
கூர்ந்துமிக உதையமதில் கொண்டால் மைந்தா
கொண்டதொரு மேகமெல்லாம் அத்து நல்ல
ஊர்ந்துமிக வீரியங்கள் தீர்க்க மாகும்
உண்மையுள்ள தாதுவெல்லாம் பிலக்கும் பாரே
807

பாரப்பா கம்புடனே தினையுங் கூட்டி
பக்குவமாய் பாலதனிலே பாகஞ் செய்து
காரப்பா யினிப்புடனே அமுது கொள்ளு
கனங்காம வொருபோது கொண்டால் மைந்தா
நேரப்பா தினையெனுமன்ன பித்த நோய்கள்
நீங்கிவிடுந் தேகமது குளிர்ச்சி யாகும்
வீரப்பா செய்யாமல் கற்பங் கொள்ளு
வீரடங்கி தேகம்வச்சிர காய மாமே.
808

காயமென்ற காயமொரு சொல்லக் கேளு
கனமான திரிகடுகு சமமாய்க் கூட்டி
நேயமுடன் வறுத்திடித்துப் பொடியே செய்து
நினைவாகச் சட்டியொன்று காய வைத்து
தாயகமாய் கருப்பட்டி அதனிற் போட
தப்பாமல் உருகியதும் குழம்பாய் நிற்கும்
நாயமுடன் பொடிதூவிக் கிண்டும் போது
நலமாக மெழுகுபதம் நன்றாய்ப் பாரே.
809

ஆமப்பா மெழுகெடுத்து அதையந் தன்னில்
அன்பாக கொண்டவுடன் அய்யா கேளு
நாமப்பா சொல்லுகிறோம் அதநந் தன்னில்
நணுகுடனே மேகவெட்டை அற்றுப் போகும்
தாமப்பா கர்ப்பமதுக் குறுதி யாகும்
தனதான பித்தநீர் தானே போகும்
காமப்பால் கொண்டவுடன் உறுதி யாகும்
கற்பூர வாசமதாய் காந்தி யாமே.
810

காந்தியாம் அரிதாரம் கல்வத் திட்டு
கருவான ஆதியந்தமாய் கூடச் சேர்த்து
பாந்திபமாய்ச் செய்நீரா லரைத்து மைந்தா
பக்குவமாய் ஓட்டிலிட்டுவைத்துப் புடத்தைப் போடு
சாந்தமாய் நீறியது பற்ப மாகுமே.
~~சயமான நோய்களெல்லாம்~~
சயமான நோய்களெல்லாம் அடித்துப் போடு
மாந்தமென்ற வாய்வுகளும் இன்மந் தீரும்
மக்கான நீர்சுரம் அற்றுப் போமே.
811

போமென்று விடுக்காமல் குருசு சுத்தம்
புனிதமுடன் ஆதியந்தமுங் கூடச் சேர்த்து
ஆமென்ற கல்வமதி லரைத்து மைந்தா
அழகான தீரமதுக் கரங்கி பூட்டி
சாமென்று மண்சீலை வலுவாய்ச் செய்து
சுருக்கறிந்து புடம்போட தீரங் கட்டி
ஏமென்ற செந்தூரங் காந்தி யாகு
உண்மையுட னிருக்குமதைப் பதனம் பண்ணே.
812.

பண்ணியதோர் செந்தூரம் பணவிடைதா னெடுத்து
பாங்கான திரிகடுகுச் சூரணமே செய்து
உன்னியதோர் செந்தூர மணைத்துக் கொண்டால்
உள்ளுக்கை மந்தார காசந் தீரும்
புண்ணியனே கற்பமது சொன்ன தென்றால்
போக்கறிந்து தேகமதின் நோயைத் தீர்த்து
தன்னிமையாய் கற்பமது கொண்டால் மைந்தா
தனதாக தேகமது வலுத்துப் போமே.
813

தாம்பூர பற்பம்.

வலுவான தாம்பூர பற்பமுந் சொல்வேன்
மகத்தான குருவுடனே சுத்தங் கூட்டி
நழுவாமல் சீனமொடு தார பற்பம்
நழுவாமல் முலைப்பாலா லரைத்து மைந்தா
சிறுகாமல் அட்டதற்கு கவசம் பண்ணி
சிக்கெனவே ஓட்டிலடைத்து சீலை செய்து
அழிகாமல் புடம்போட்டு யெடுத்துப் பாரு
அப்பனே தாம்பூரம் நீறிப் போமே.
814

நீறிப்போம் பின்னமொரு முறையைக் கேளு
நெடிதாக தாம்பிரத் தகடாய்த் தட்டி
தேறிப்பார் அரிதாரக் கட்டை நன்றாய்
தென்னைபடு அரைத்துஅந்த தகட்டின் பூசி
பாரிப்பாய் ஓட்டில்வைத்துச் சீலை செய்து
பக்குவமாய் எருமுழுத்தில் புடத்தைப் போடு
ஆறிப்பார் கவசமதின் நொறுங்கி நிற்கும்
அப்பனே பழச்சாற்றா லரைத்தி டாயே.
815

அரைத்துநன்றாய் வழித்தெடுத்து வட்டுப் பண்ணி
அவைநன்றாய் காய்ந்தபின்பு ஓட்டில் வைத்து
உறைத்தடாவண் தெரியோ மண்ணுஞ் செய்து
உயர்வாக நிறையறிந்து புடத்தைப் போடு.
நிறைத்தஅண வாறியேதான் எடுத்துப் பாரு
நிறையோ டெழுத்து வெள்ளை - யாகு
மப்பா
அரைத்தபழச் சாறதனால் பின்னு மாட்டி
அருவாக முன்போலே புடத்தைப் போடே.
816

போட்டே ஆறவிட்டு எடுத்துப் பாரு
புதுமையுடன் பூப்போலே நீறிப் போகும்
தேட்டமுடன் நீரெடுத்துப் பதனம் பண்ணு
சிவசிவா பற்பமதின் பெயரைக் கேளு
நாட்டமுடன் வெள்ளிதனில் ஒருத்திக் கொன்று
நன்றாக கொடுத்திட மேகங்கள் சாகும்
வாட்டமுள்ள பிணிகளுக்கு தேனி லீய்ந்தால்
வாங்காத இன்மையெல்லாம் மாண்டு போமே
817

ஏடுஎண் 145
27.12.86.

போமென்று விடுக்காமல் மின்ன மொன்று
புத்தியுடன் சொல்லுகிறேன் மைந்தா கேளு
ஆமென்று தாம்பூரப் பொடியாய்ச் செய்து
அப்பனே பழச்சாத்திரால் சுத்தி பண்ணி
ஏமென்று சொல்லுகிறோ மாதி யந்தம்
நயமாக மிடைக்கிடைதான் சேர்த்துக் கொண்டு
தாமென்ற பழச்சாத்தா லரைத்து மைந்தா
தன்மையுடன் புடம்போட நீறிப் போமே. 818.

போமப்பா கெந்தகத்தைச் சுத்தி பண்ணி
போக்கோடே ஆதியந்தங் கூடச் சேர்த்து
காமப்பால் பழச்சாத்தால் கல்வத் தாட்டி
கனமுடம்ப ஆட்டினதால் மெழுகாய் நிற்கும்
ஆமப்பா வழித்துநன்றாய் வட்டுப் பண்ணி
ஆறவிட்டு ஓட்டிலவைத்து சீலை செய்து
நாமப்பா அடக்கிவிட்ட நிதானங் கண்டு
நன்மையுடன் புடம்போட நீறிப் போமே. 819

போமப்பா பற்பமதை உண்கைதான் கேளு
புதுமையுடன் தேனிலே கொண்டா யானால்
நாமப்பா சொல்லுகிறோம் மேகமெல்லாம்
நிற்காமல் ஓடிவிடு நன்மை யாக
தாமப்பா தாதுவிர்த்தி அதிக முண்டாம்
தயவான கெந்தகத்தின் பற்பத் தாலே
ஆமப்பா நாகரசம் பற்ப மாகும்
ஆதியந்தம் மறந்தினால் யெல்லாம் போச்சு. 820

போச்சென்று விடுகாமல் லிங்கக் கட்டு
புதுமையுள்ள சாதிலிங்கக் கட்டுச் சொல்வேன்
போச்சென்று நினையாதே ஆதி யந்தம்
பெருமையுள்ள சித்தருக்குப் பாவா லாட்ட
நீச்சென்ற மெழுகாகும் மைந்தா கேளு
நிசமான கெந்திரசம் மெழுகிற்ச் சேர்த்து
ஆச்~~சென்று~~ கல்வமதில் லாட்டி நன்றாய்
அதுதான் லிங்கமதின் கவசம் போடே
௪௩௧

போடப்பா கவசமதை அழுத்தி மைந்தா
போட்டபின்பு சூப்பிடத்தில் போடு போடு
நாடப்பா யாப்படியே மூன்றுபுடம் போடு
நலமான சாதிலிங்கம் யிறுகிக் கட்டும்
ஆடப்பா மதித்தனிலே நின்று ஆடு
அதன்பிறகு ரவிதனிலே அழுத்திப் போடு
தேடப்பா திவ்யயோகம் புதுமை தன்னை
தேடினதால் தேகசித்தித் திறம தாமே
௪௩௨.

சூதனாதி வேதியம்.

திறமாக யாருக்குமென்றால் சூதனாதி
செப்புகிறேன் புலத்தியனே திறமாய்க் கேளு
உரமான திரிகடுகு சூதனமே செய்து
உத்தமொரு மூலிகையாம் காம்புநிறை நீக்கி
கரமான சட்டிதனைக் காய வைத்து
கருகாமல் மூலிகையைக் கடைந்து மைந்தா
திறமான திரிகடுகு சூதனமுஞ் சேர்த்து
நேராகத் தான்கடைந்து வைத்துக் கொள்ளே
௪௩௩

கொன்னப்பா பூச்சாறு வாங்கி மைந்தா
குணமாக அடுப்பேற்றிப் பாகாய்க் கிண்டி
மென்னப்பா பாகுவரும் தன்மையந் தன்னில்
மேலாக யருவொடியும் மெல்லக் கொட்டி
மன்னப்பா பிடித்ததுபோல் கிண்டு கிண்டு
மார்க்கமுடன் பாகுடனேப் பொடியும் சேர்த்து
தெள்ளப்பா போலவுமே திரளும் நன்றாய்
திறமாகப் பிசைந்துருட்டிப் பதனம் பண்ணே.
௪௨௪

பண்ணியதோர் லேகியந்தான் பூர ணாதி
பார்த்திலே யந்தமுறை நருவர் காணார்
உண்ணப்பா அண்டக்கா யளவு வீதம்
உண்ட பின்பு மூலத்தில் மனதை வைத்து
விண்ணப்பா தானோக்கி மென்ன நேசி
விதிமான நேசிதான் பூரகமே செய்து
நண்ணப்பா கும்பகத்தில் நின்றான் மைந்தா
நலமான ஞானத்துக் குறுதி யாமே.
௪௨௫

உறுதியுள்ள லேகியந்தான் இன்ன மொன்று
உண்மையுடன் சொல்லுகிறேன் மைந்தா கேளு
பருதியேனுஞ் சாதிக்காய் சாதி பத்திரி
பதமான கிராம்புடனே யேலங் கூட்டி
அருதியினும் அவின்கூட்டி அய்ந்து மொன்றாய்
அசமாக வெண்ணையினால் மெழுகா யாட்டி
கருதிமன தொன்றாக மூலிதான் வாங்கி
காம்புவிரை தனைநீக்கி கரிக்கி டாயே.
௪௨௬

இருக்கியது பொன்னிறம் போல் கருக்கிக் கொண்டு
கடைந்திடுவாய் பொடியாக மைந்தா மைந்தா
உருக்கியது வெல்லமதில் பிசைந்து கொண்டு
உடன்சேரு முன்னுரைத்த மருந்து தன்னை,
நெருக்கிநன்றாய் பிசைந்துருட்டிப் பீங்கான் தன்னில்
நிறுத்திவைப் பதனமதாய் நிறுத்திக் கொண்டு
அரிக்கிழுத்த வெழுத்துவைப் பணிந்து போற்றி
அப்பனே உடலறிந்து கொண்டிடாயே.
827

கொண்டவுடன் சூரணத்தின் போதை தன்னை
உறுத்தற்கு நாவுமுன்போ பாலை முன்பே
விண்டதொரு மொழிதவறா அறிவு குன்றா
விஞ்ஞைகிறன் நாவுரை மேனி வாடார்
அண்டர்பிரான் அருள்மிகவே ஜொலிக்கு மப்பா
அரக்கு · பன்னிரண்டு மடங்கும் வீட்டுள்
குன்றாத சூரணமாய்ப் போத மாகி
இணைமாக சுகாபோதை யாகும் பாரே.
828

சாராய வரம்.

பாரப்பா போதையே மாக வொன்றுப்
பருஅகெட்ட சாராயந் தன்னைக் குடித்தான்
வீரப்பா. தான்மீறி பித்தாய்க் கொண்டு
மெய்மறந்து பித்தநீர் மேலே சென்று
உளரப்பா தேகமெல்லாம் அரிப்பு மீறி
உண்டதொரு கற்பமெல்லாம் வீழலாய்ப் போகும்
நேரப்பா வேதமது தடுத்த நூலை
நீக்காத நரைதிரையான் சாவான் பாரே.

கள்ளு விவரம்.

பார்க்கவே கள்ளுடைய நேர்மை கேளு
பாங்கான பித்தநீர் சிரசில்க் கொண்டு
ஏற்கவே கண்ணொளியும் மயங்கிப் போகும்
எழுந்திருக்க ஒட்டாது மயக்கித் தள்ளும்
சேர்க்கையுடன் அனல்மீறி புலம்பி விக்கும்
தொடர்ந்தாற்ந்து வாசியதுந் தீறுமந் தீறும்
சேர்க்குடன் ஞானதெய்ந்து மதியே நின்று
மோனநிலை தான்மறந்து போவான் காணே.
830

காணிக்கை
காணப்பா கள்ளுங் காரா-யத் தாலே
கண்மாறுந் செத்தவர்கள் ளாந்தங் கோடி
திண்ணப்பா யதுவெண்டு தள்ளு தள்ளு
தீணைகுடன் பேசாதே மொழிதப் பாதே
தாமப்பா வென்றமதந் தனைக்கொள் ளாதே
தனையறிந்து மதியமுர்தம் தானே கொண்டான்
தாணப்பா அரும்பாகும் அரும்பு தானும்
தொல்லுண்ணா னைத்ட்டசித்துங் கைக்கின்-
ளாகே.
831

ஆமப்பா புலத்தியனே யின்ன மொன்று
அடவான உண்மையொன்று சொல்லக் கேளு
தாமப்பா பெரியோரை தவசி யோரை
தாமென்று – ஞானி – மார்த்த | யோகி யோரை
காமப்பார் கொண்டசிவ ஞானி யோரை
காலறிந்த யோகமதைக் கருதி னோரை
நாமப்பா வெளியோரை வலியோர் தன்னை
நன்றான தாய்தகப்பன் நல்லோர் தானே.
832.

தானென்ற சற்குருவாந் தரணி தன்னில்
தியவான தயவுகுணஞ் சொன்ன தெய்வம்
வீணென்று தாணிணைந்து அழும்பு பேசி
வினைசெய்யும் அண்டரைத் உலகத் தன்னில்
நானென்ற மதம்பேசி திரிவா ரப்பா
நலமில்லாப் பாதகரைக் கண்டா யானால்
ஆணென்றும் பெண்ணென்றும் எண்ண
வேண்டாம்
அணியாயப் பாவிகட்கு சொல்லக் கேளே.
833

கேளப்பா நாம்சொன்னோம் மனது நொந்தால்
கொடிகன்நக்கி அண்டமுதல் நடுங்கு மப்பா
ஆளப்பா அவரவர்கள் மனம்நோகப் பண்ணும்
அசடருக்கு மரணத்தை சொல்லுவே னய்யா
மாளப்பா துரோகியுட பேரைச் சொல்லி
மனதாக மரணிக்க மாண்டு போவான்
நாளப்பா அதனாலே இத்த மில்லை
நலமையில்லா துஷ்டரைநீ சங்காரம் பண்ணே
834

பண்ணப்பா அறிந்துநீ கொள்ளா விட்டால்
பலகோடி சித்தருட சாபம் நல்கும்
விண்ணப்பா தானிடியு மப்பா சொன்னேன்
வினைசெய்தோர் தனக்கிவினை செய்தால் நன்மை
புண்ணப்பா தனக்கு மருந்திட்டு அந்த
புண்ணாற்றும் மகிமையீப்பா புத்தி சொன்னேன்
திண்ணப்பா வாருதியில் ~~[illegible]~~ உகைபசசீரானவை
தன்மையுடன் கொண்டுவந்து தயிலம் வாங்கே.
835

வாங்கியந்த தயிலமதில் வங்கொள் சேர்த்து
மந்திரித்துச் சிமிழ்தனிலே பதனம் பண்ணி
தீங்கில்லா தீங்குதான் செய்யும் பாவி
திருடர்களைத் தானழைத்து வைத்துக் கொண்டு
ஓங்கியதோர் தயிலமதில் பணவிடைதா னெடுத்து
உண்மையுடன் வத்சகமாம் யவனுக் கீவாய்
தாங்கியே தயிலமது சென்ற போதே
தான்மயங்கி அறிவழிந்து போவான் பாரே.
836

பார்மீதிலே திரிந்து அவன்தான் மைந்தா
பஞ்சிப்பான் உலகோரைக் கண்டால் மைந்தா
நேரமீதில் பெரியோரைக் கண்டால் மைந்தா
நெடிதாகக் கீழ்விழுந்து பணிவான் பாவி
ஊர்மீதில் கழுதையது திரியுமாப் போல
உள்சென்று பத்தெட்டு ஓடிப் போவான்
ஆர்மீதில் அழும்புகளும் பேச மாட்டான்
அதட்டினால் ஓடிடுவான் அறிந்து பாரே.
837

அறிந்துபார் யின்னமொன்று வந்தகணமுஞ் சொல்-
லுவோம்

அந்தநாற யிப்படிக்கும் வவ்வான் வாங்கி
பறந்துரெண்டு திராக்ஷையுமே அரைத்து நன்ல
பதமான புகையிலையின் உடன் சேர்த்து
தெரிந்துநல்ல புகையிலையைப் பாரு மெத்தி
சிக்கெனவே வைத்திருநீ மைந்தா மைந்தா
பொருந்தும்ரெண்டும் ஒன்றாகப் பொருந்தும் பாரு
புவியோர்கள் கண்டாக்கால் புகையிலை யென்-
பாரே.

838

பாரப்பா யிப்புகையை பாவியோர்கள்
பக்குவமாய்க் குடித்திடவே மைந்தா கேளு
நேரப்பா நினைப்பில் அறிவு இன்றி
நெருக்காரம் பித்தமது மேலே நோக்கி
ஊரப்பா திரிவன்காண் பித்தன் போலே
உலகோரைக் கண்டவுடன் பயந்து நிற்பான்
சீரப்பா கண்டதெல்லாம் தின்பான் பாவி
திறங்கெட்டு மதிகலங்கிப் போவான் பாரே.

839

பார்க்கவே அப்பீகம் வாங்கி மைந்தா
பண்பாகப் பொடித்ததினை பதனம் பண்ணி
யேற்கவே விபூதியுடன் கலந்து கொண்டு
வெள்ளைவத்தானெடுத்து கையில் வைத்து
மோர்க்கமுள்ள மோடன்முன்னே ஊது ஊது
மோசமில்லை அப்பிநேயம் அதர்தான் சென்று
சேர்க்கையுடன் கண்ணதிலே பார்த்து வீழும்
தேனத்திலே கண்ணைமெல்லக் கசக்கு வாளே.

840

கருக்கையிலே அதரத்துவம் விழியில் பத்தி
கரைந்துதனைத் தண்ணீராய்க் கரைந்து போகும்
துக்கமதாய் கண்ணொளியும் மயங்கிப் போகும்
வையகத்தில் நடப்பதற்கு காலங் கேது
பிக்கமில்லை கண்போனால் காலங் கேது
பிணம்போலே மதிகெட்டு அலைவா னப்பா
வருக்கமில்லா மாணிக்கை அகற்ற வேணும்
வெற்றிவினை தீர்வதற்கு மருந்து பாரே

841

மருந்திருந்து பிணிவிலக்கும் வாறு போலே
வஞ்சகர்க்கு மருந்தீந்தால் மக்காள் மக்காள்
வருந்தியந்த மருந்துவகை செய்து கொண்டு
வஞ்சகரை சிங்காரம் பண்ண வேணும்
அருந்தமிழா ஆறைத்துவண் டெண்டு ஞானத்தின்
அவையடக்கம் பொருளடக்கம் அந்தம் சொன்னேன்
தெரிந்துகொண்டு பன்னிரெண்டு ஆறை மைந்தா
திவ்விவா யடக்கமாய் தெரிந்து கொள்ளே,

842

சொல்வதற்குப் பன்னிரண்டு அவசரத்தினை
குறிப்புடனே தானடக்கிக் குருவைப் போற்றி
செய்வதற்கு மூலமதின் மனதை ஒட்டி
தீர்க்கமதாய் நலமனதைச் சேர்த்து கொண்டு
வெல்வதற்கு மேல்மூலம் நடுவி ஆணி
வேதாந்த ரகசியத்தைப் பூரகத்தைப் பற்றி
சொல்வதற்கு உவமையில்லா கும்பகத்தின் சின்னம்
சேரமன் மதியமிர்தம் பூரணமாய்க் கொள்ளே!

843

மதியமுர்த்தி என்றதொரு வகையை மைந்தா
மார்க்கமுடன் கோடையிலே ஒருவனுங் காண்பான்
வதியறிந்தான் மதியறிவான் மதிதான் தேய்ந்து
விசையான ரவியதினால் அமுர்தங் காணும்
பதியறிந்த அமுர்தமதை கொள்வ தற்கு
பக்குவமாய் மூலமதின் மனத்தை யோட்டி
கெதிமோட்ச மென்றமேல் மூலம் பாரு
கிருபையதி லாண்டாகும் அறிவைப் பாரே.
844

பத்துவது மேன்மூலம் ஆறா தாரம்
பாங்கயத்தின் தெரிசனத்தை பத்தினாக்கால்
புத்துமுர்தங் கசிந்துமிக ஒழுகு மப்பா
புத்தியுடன் அதையறிந்து கொள்வா யானால்
முத்தியுள்ள மோட்சமெய்தக் கிட்டு முண்டாம்
மூதறிவும் நடுதாத்துமடா கற்பங் கொள்ளு
அத்துடனே தேகமதில் நின்ற நோய்கள்
அரகரா அமுர்தமது தேக மாச்சே.
845

தேகமென்ற மூலமதின் கூடு கொண்டான்
சிவசிவா அப்புகைதான் மேலே சென்று
ஆகமுடன் சிரசதிலே அனைந்தான் மீறி
அப்பான நீர்ப்பனித்து வலியுண் டாச்சு
பாகமுடன் அன்னீர்தான் தசையிற் சேர்ந்து
பக்குவமாய் கூடுகொண்ட அரங்க ளாச்சு
தாகமுடன் அரமீறி வாத பித்தம்
தணிந்ததினாற் சேட்டுமத்துக் குயிர தாச்சே.
846

ஆச்சப்பா சேட்டுமெந்தரான் மீறித்த தானைான்
அப்பனே தோஷத்துக்கி இருதி யாச்சு
நீச்சப்பா தோஷத்துக் கடிதா நென்ன
நினையான வாதமதில் பித்த மீறி
பேச்சப்பா பாதாதி கேசந் தொட்டு
பொங்கியந்த பித்தநீர் பரந்து மீறி
காச்சப்பா தேய்வுடனே வாய்வுங் கூடிக்
கடினமுடன் ஆகாசம் புக்கும் பாரே.
847

பாரப்பா மூன்றுமொன்றாய்க் கூடிப் போச்சு
பகையான பிருதிவியும் அப்பும் நின்று
சேரப்பா கரைந்தத்தண்ணீர் மண்ணாய்ப் போச்சு
சிவசிவா. பஞ்சகர்த்தர் உதித்த தாச்சு
ஆரப்பா அறிவார்கள் இதுடன் வாழ்க்கை
அரகரா நீர்க்குமிழி மாய்கை மாய்கை
தேரப்பா இனிப்போவாரந் இதுடன் வாழ்க்கை
சிவசிவா யதைஅறிந்து இருவைக் காரே.
848

இவைஅத்துக்கு மருந்து.

காரப்பா நீரழிவு முதலா யுள்ள
கர்மம்வினை அனைத்துமடா வைக்கோ யின்னை
பாரப்பா பிணியறிந்து மருந்து செய்ய
பக்குவங்கள் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
தேரப்பா திரிகடுகைச் சூரணமே செய்து
திறமான முப்பூவுங் கூடச் சேர்த்து
வாரப்பா தேனதினால் பிசைந்து கொண்டு
மார்க்கமுடன் கொண்டுவிட்டால் சுரங்கள் போச்சே.
849

கஷாயம்

போச்சப்பா கியாழமொன்று சொல்லக் கேளு
புகழாக அரத்தையுடன் திரிகடுகுக் கூட்டி
காச்சப்பா கட்டிநன்றாய்க் கியாழம் வைத்துக்
கணக்காக வடித்திறுத்து முப்பூச் சேர்த்து
பாச்சப்பா தேனதிலே கொஞ்சம் விட்டு
பக்குவமாய்க் குடித்திடவே சுரங்கள் போகும்
ஆச்சப்பா சுரமென்ற தெல்லாம் போகும்
அரகரா குளிர்ச்சுரமுங் கண்டு போமே.
850

தயிலம்

போமப்பா தயிலமொன்று சொல்லக் கேளு
புத்தியுடன் சீரகமும் சோம்பு கூட்டி
காமப்பால் திருநீறா வரைத்துக் கொண்டு
கணக்காக ஒருபடி நல்லெண்ணை வாங்கி
ஆமப்பா பசுவின்பால் கூடச் சேர்த்து
அரைமருந்து அதுவுடனே கரைத்துக் கொண்டு
தாமப்பா மெழுகு பதமாய் வடித்துத்
தன்மையுடன் முழுகிவரச் சுரமும் போமே.
851

சுரமான பித்தமதால் வெட்டை மீறி
சூடுகொண்டு மேகநீ ரெரிவு காணும்
திரமான நீரெரிவை பிடித்த தானால்
திறமாக ரெசணையுடன் யிறங்கும் பாரு
உரமான ரெசணையதை மீறித் தானால்
உடன்காணும் நீர்ப்பிணவை உண்மை உண்மை
திறமாக மேகமதால் கண்ட ரோகம்
சேர்ந்ததொரு நீரெரிவு போகக் கேளே.
852

கஷாயம்

கேளப்பா கஷாயமொன்று சொல்லக் கேளு
கிருபையுள்ள மஞ்சணத்தின் ஆவாரைவேர்ப்பட்டை
வேளப்பா கடலாரோஞ்சிப் பட்டை கூட்டி
வெகுவுடன் மூன்றுமொன்றாய் பொடித்து நல்ல
நாளப்பா பாண்டமதில் விட்டு மைந்தா
நல்லதண்ணீர் ஏழ்படி யெட்டொன்றாக்கி
வாளப்பா அதில் அரைக் கால்படி யாவுத்து
வளமையுள்ள குழம்போட்டு இறுத்திடாயே. 853

இறுத்திடுவாய் நாலுமுறை மைந்தா மைந்தா
இணமாகும் நீரழிவு இதம் நிற்கும்
தடுத்ததொரு நீரழிவுப் பண்ணைப்புப் போக
தன்மையுடன் வேகியந்தா சொன்னேன் கேளு
அருத்ததொரு திரிகடுகு திரிபலாதி வாதி
அருதா வகைக்கிருகி பலமாய் வாங்கி
வறுத்ததொரு ஆவாரை செங்கிழுவை கொன்றை
விதமான மஞ்சணத்தி நெல்லி யாமே. 854

ஆமப்பா அஞ்சுவேர் பட்டை வாங்கி
அப்பனே பொடித்திடுவாய் வெவ்வேறாக
தாமப்பா பொடிவகை யோர்பலமாய்க் கூட்டி
சர்க்கரையுடன் முன்மருந்து பொடித்துச் சேர்த்து
நாமப்பா சொல்லுகிறோம் பத்திரி ஜாதிக்காய்
நலமான குங்குமப்பூ கிராம்பு கூட்டி
காமப்பா வகைக்கி அரைப்பலமாய் வாங்கி
கடுகவே பொடித்து முன்பொடியுடன் சேரே. 855

சேர்த்ததொரு பொடிகளெல்லாம் ஒன்றாய்க் கூட்டி
செம்மையுடன் வைத்ததின்மேல் முறையைக் கேளு
காத்திடுவாய் பசுவின்பால் தேங்காய்ப் பாலும்
தண்மையுட ஆட்டுப்பால் பனைநீர் தானும்
நேர்த்தியாய் வகைக்கி ஒருபடியாய் வாங்கி
நினைவாகப் பாண்டமதில் விட்டுக் கொண்டு
காத்திடுவா யடுப்பேற்றி அனலை மூட்டி
காணவே கொதித்தெழும்பு மப்போ தானே.
856

தானேதான் கொதிகிளம்பும் பருவந் தன்னில்
தப்பாமல் நல்லெண்ணெய் படியே வார்த்து
மானகேள் பொடிவகையைக் கொட்டிக் கிண்டு
மக்களே மெழுகுபத மாகும் போதில்
தீனேதான் திரியாமல் இதனை வாங்கி
மெய்யான இதனையளாப் பலமோ ரெண்டு
பூணேதான் முக்குருவில் விராகன் பத்து
புதுமையுடன் நெத்தையுமே பொடித்துப் போடே.
857

போட்டவுடன் இறக்கிநன்றா யாற விட்டு
அதுதான பீங்கானதன் பரணி தன்னில்
நாட்டமுடன் வழித்துவைத்துப் பதனம் பண்ணி
நலமான அண்டைக்கா லளவு கொண்டு
நாட்டிகமா யிருபதுநாள் கொள்ளும் போதில்
தப்பாமல் நீரழிவு தானே போகும்
தேட்டமுள்ள நீர்ப்பேதும் நாவ றச்சி
தீராத பிணையோடு மேகம் போமே.
858.

மேகத்தயிலம்.

போமப்பா தயிலமொன்று சொல்லக் கேளு
பொல்லாத மேகநீர் தழிவு போக
ஆமப்பா கஸ்தூரி தயிலஞ் சொல்வோம்
அப்பனே புலத்தியனே நன்றாய்க் கேளு
தாமப்பா நல்லெண்ணை ஆவின் நெய்யும்
தண்மையுள்ள நிம்பமெண்ணை வகைக்குப்
நாமப்பா வகைக்கொரு படியாய் வாங்கி
நாமனே பாண்டமதில் விட்டுக் கொள்ளே.
859.

கொள்வதற்குச் சந்தணமோர் பலந்தான் பத்து
கூர்மையுடன் எண்ணெய்தனி லரைத்து மைந்தா
விள்வதற்குத் தாய்கொள்ளி கிழங்குச் சாறும்
விதமான படிச்சாறு படிதான் வாரு
சொல்வதொரு யிளநீர்ப்படி ரெண்டு வாரு
சித்தமுள்ள சாதிக்காய் சாதி பத்திரி
செல்வதொரு சீரகமும் படிச்சாத் தானே
சிறந்தவே அரைத்து அந்தப் பாகுடனே சேரே
860

சேர்த்துமிக அடுப்பேத்தி தீயை மூட்டி
செம்மையுடன் மெழுகுபத மாகும் போதில்
பாத்துமிக கஸ்தூரி பலமதான் வாங்கி
பக்குவமாய்க் கரகமதில் போட்டு மைந்தா
வாத்திடுவாய் தயிலமதை குடத் துள்ளே
மக்கத்தான தயிலமதை பதனம் பண்ணி
போத்திமிக மூழ்கிவர மேக காங்கை
பொல்லாத நீர்தழிவு சயங்கள் போச்சே.
861

போச்சப்பா சேட்டுமேத்தான் தெயங்கன் மீறி
பொன்னாதே யருணைதாய் பித்த மீறி
காச்சப்பா அனல்மீறி தேகம் வத்தி
காங்கைகொண்டு யருமலிங்கை கதமாய்ப் போவன்
பாச்சப்பா தியமான நோகந் தீர
பக்குவமனாம் சொல்லுகிறேன் பண்பாய்க் கேளு
ஆச்சப்பா அரத்தைநன்றா யடித்துக் கொண்டு
அடுரிவிட்டு கஷாயமதாய் அளவாய்க்
காச்சே.
862.

காச்சினதோர் கஷாயமதை யருத்துக் கொண்டு
கனமான முப்பூவின் விநாகன் சேர்த்து
பாச்சுவாய் தேகமதில் கஷாயந் தன்னை
பக்குவமாய் மூன்றுனாள்க் கொள்ளும் போதில்
மூச்சவென்ற யருமலது அகலும் மைந்தா
மனதான வேகியந்தா னொன்று கேளு
தாகச்சியன்னரத் தூதுவளை கண்டங் கத்திரி
திமூலமே யடித்துநன்றாய் வடித்துக் கொண்டோ
863

கொள்ளப்பா யருவைகையும் நன்றாச் சேர்த்து
திருவான அடுரிவிட்டு நவியங்க் காச்சு
அள்ளப்பா யப்படியே பத்துமுறை காச்சு
அதன்பிறகு யெட்டிலொன்றுச் சுக்கைத்தயைச்
சேர்த்து
வில்லப்பா முப்பூவும் சேர்த்துக் கொண்டு
விதயான பசுவின்பால் நெய்யுங் கூட்டி
நல்லப்பா அடுப்பேத்திப் பொடியைக் கொட்டி
நலமாக மெழுகுபத மாக வாங்கே.
864

வாங்கிநெல்லிக் காயளவு கொண்டாள் மைந்தா
மாறாத செயங்களெல்லா மாறிப் போச்சு
யோங்கியே ஓடிவிடும் அயன்மாம் பிய்த்தான்
யென்னசொல்லுவேன் மண்டலத்தில் தேக சித்தி
தாங்கியே வாடாத தியான மொன்று
சொல்லுவேன் புலத்தியனே நன்றாய்க் கேளு
தேங்காயும் பாலாழி, தயிரு னாழி
செம்மறியன் பசுவின் கோமியம் வாங்கே
865

வாங்கிநன்றாய் பாண்டமதில் விட்டுக் கொண்டு
மைந்தனே கொடுப்பை பழச்சாறு மெசுமெசுகை
பாங்கிடனே வகைக்கிரு படிதான் வாங்கி
பக்குவமாய் மிளகிரு படிதான் வாங்கி
ஆங்கதுகொண்ட முரியினா வரைத்து வாங்கி
அப்பனே பாண்டமதில் சேர்த்துக் கொண்டு
சாங்கமாய் நல்லெண்ணை படிநாலு வார்த்து
சமர்த்தாக அடுப்பேத்தி காச்சு காச்சே.
866

காச்சிநன்றாய் மெழுகுபத மான பின்பு
கடகமதில் தான்வடிக்கும் போதில் மைந்தா
ஆச்சியே கடகமதில் அண்டச் சுண்ணம்
அன்பான குறபற்பம் கஸ்தூரி யோடு
தாச்சியெல்லா வகைக்கிஅரைப் பலந்தான் போடு
சமர்த்தாக தியானமதை வடித்து மைந்தா
தேச்சு மெழுகிவர செயங்கள் போச்சு
இவைகளா தேகமது வலுத்துப் போச்சே.
867

போச்சப்பா இன்மமென்ற தெவ்வாம் போக
புதுமையுள்ள லேகியந்தா னொன்று கேளு
காச்சியதோர் கருப்பட்டி பத்துப்பலம் வாங்கி
கருவான அமுரியினா லரைத்துக் கொண்டு
பாச்சுவாய் அடுப்பதனில் அன்னை பூட்டி
பக்குவமாய் காச்சுவாய் பாகு போலே
தாச்சியில்லாப் பாகுதனில் சேர் மருந்தைக் கேளு
தப்பாமல் காரமுடன் சாரம் வாங்கே.
868

வாங்குவாய் வெடியுப்பு சுக்கா நந்தான்
வளமான வளைகியுப்பு யந்துப் போட்ட
பாங்குடனே வெங்காரம் சூட வுப்பு
பக்குவமாய் வெட்டுவளை உப்பு வாங்கி
சாங்கமாய் பொடித்துநன்றாய் பாகுதனிற் சேர்த்து
சமாசமாய்க் கிண்டிவர மெழுகு மாகும்
ஆங்கவனே மெழுகுதனை சீங்கா னுள்ளே
அடைத்துநீ பதனமதாய் வைத்துப் போற்றே.
869

போற்றியே மெழுகுதனை மைந்தா கேளு
புத்தியுடன் பத்துநாள் கொள்ளச் சொல்லு
தேற்றியே கொண்டதினால் சுத்தி இன்மம்
திரண்டதொரு வாய்வினால் வலிகின் மங்கள்
சாற்றியதோர் நெஞ்சடைப்பு பித்த இன்மம்
சினைத்தசெய்யும் வெரிகின்னம் ருத்திர வாய்வு
ஆத்தியதோர் சூதகத்தின் வலியோ டொக்க
அரக்கா குறுக்குவலி அனைத்தும் போமே.
870

போமப்பா வாய்வுமேல் வந்த நோய்கள்
பொல்லாத திரட்சியொடு முர்ச்சை யெல்லாம்
சாமப்பா லேகியத்தைக் கொண்டு (மைந்தா)

158-வது ஏடு இல்லை.

....
....
.... கொண்டு.
ஏடு.எண்.159. ....
வேளப்பா முப்புவுங் கூடச் சேர்த்து
விசையாக அடுப்பேற்றி தீண்டும் போதில்
ஆளப்பா நல்லெண்ணெய் அளவாய் விட்டு
அரகரா மெழுகுபத மாக வாங்கே.

876

வாங்கியதோர் லேகியத்தை அந்தி சந்தி
வரிசையாய் நெல்லிக்கா யளவு கொள்ள
யோங்கியே பறந்தோடும் நோவ மெல்லாம
யெண்ணசொல்வேன் யீரங்க நாரின் மைந்தா
பாங்குடனே உள்நோவும் வெளிநோ வந்தால்
பற்றிநின்ற தீநோவும் மொத்த நோவம
தாங்கிநின்ற இருநோவும் வாய்வு நோவம்
திப்பாமல் நோவ மொண்பதுவும் போமே.

877

ஞானத்துக்குத் தயாளம்.

போமப்பா தெளிவையொன்று சொல்லக் கேளு
புதுமையுள்ள நல்லெண்ணெய் நெய்யுங் கூட்டி
ஆமப்பா பழச்சாறுந் தயாருஞ் சேர்த்து
அன்பாக யிருநாழிச் சாறுங் கூட்டி
தாமப்பா அடுப்பேற்றிக் காச்சும் போதில்
தன்மையுடன் அய்ங்கோலங் கொள்ளும் விடு
நாமப்பா மெழுகுபத மான போதில்
நன்கான மதின்பூரம் புதைக்கு போடே.
878

போட்டதொரு கநகமதில் வடித்து மைந்தா
புகழாகத் தினைக்கிட்டு முழுகச் சொல்லு
தேட்டமுடன் முழுகிவர மூல வாய்வு
திறங்கெட்டு ஓடிவிடும் அப்பா சொன்னேன்
நாட்டமுட னோய்கண்டு தேகம் பொன்போல்
நன்மையுள்ள தேகமதாய் நன்னை மாகும்
வாட்டமில்லா வெட்கமிதன் கூட்டமுண்டாம்
மனமதன்போல் தெளியுண்டாம் மைந்தா பாரே.
879

பாரப்பா பன்னிரண்டு நாளுக் குள்ளே
பாடிவைத்த பொருளையெல்லாம் அடக்க மாகும்
நேரப்பா பன்னிரண்டு ஆண்டிற்குள் இருக்கும்
நினைவாக யின்னாளைப் பதனம் பண்ணு
காரப்பா குபேரத்தைக் கிணைமாய் ஒப்பாகி
கற்பூர தீபமதில் கருத்தை வைத்து
சாரப்பா மதியமிர்தம் பானம் பண்ணி
தோஷமதை நிவிர்த்தியாக மாகுந் தானே.
880

23.10.87

தேகத வாய்வுக்கு

தானென்ற சொற்பநோய் தீர்வு தற்கு
தீயவான கருவொன்று சொல்லக் கேளு
ஊனென்ற சிறுகைநத்த கருக்கி மைந்தா
உண்மையுடன் சிறுநீரால் பிசைந்து கூட்டி
வானென்ற ரவிதனிலே காயப் போடு
மார்க்கமுடன் யாப்படியே புடமுறை பண்ணி
கோனென்ற அமுரியாலே கரைத்து மைந்தா
கிருமையுடன் தெளிவிறுத்து ரவியல் வையே. 881

வைக்கவே உப்பதுவும் படரும் பாரு
வரிசையுடன் பதனமாய் எடுத்து மைந்தா
தைக்கவே மிளகாணில் பதனம் பண்ணி
தாரணியில் பெண்களுக்குச் சொற்ப நோய்தான்
நாக்கவே வந்ததென்று சொன்னால் மைந்தா
நன்மையுடன் ருதுவாகும் நாளில் தானே
மைக்கவே மாப்பண்டம் பத்தியத்தி னாலே
வந்திடா தேகத்தில் வாய்வு தானே. 882

தானென்ற கருக்கிழியால் வாய்வு தங்கி
திரண்டதொரு சோனையினால் திசைதான் மூடி
உள்ளென்ற தேகமெல்லா மத்தி நல்ல
உண்மையுள்ள அடிவயற்றில் வலியுண் டாக்கு
பானென்ற கருக்கிழிதான் விளக்க மன்றி
பேமான வெந்துவங்கே அணுகா தய்யா
யேனென்ற ஆதியிலே வாய்வு கொண்டு
யாருக்கிருந்தால் கெர்ப்பமது இல்லை தானே. 883

கெர்ப்பமுண்டாக மருந்து

தானப்பா கெர்ப்பமதின் வாய்வு போகும்
தூயவாக முன்சொன்ன அட்டணை மைந்தா
தேனப்பா அதினுக்கி இழுப்பி யுண்ண
கெடத்திருள்ள மலங்களங்கள் சேரப் போகும்
கோனப்பா கெர்ப்பமதின் வாய்வு போகும்
கருவான கருக்குழியும் விளக்க மாகும்
கோணப்பா கருவருளான் கெர்ப்ப முண்டாம்
கூறுகிறேன் யின்னமொரு பாகங் கேளே. 884

தேனப்பா தேங்காய்ப்பால் மஞ்சள் பாலும்
கெடியான கைவேளை வீளிச் சாறும்
நானப்பா நிலவாகைச் சாறுங் கூட்ட
நன்மையுடன் வகைக்கொரு படிதான் வாங்கி
ஆனப்பா பாண்டமதி விட்டு நன்
அனுபான விளக்கெண்ணெய் படியே வார்த்து
மேலப்பா யருமருந்தை வகையாய்க் கேளு
மேன்மையுள்ள திரிகடுகு திரிபலை யிர்த்தப்பலே. 885

உப்பதுவுங் காசவலந்தான் வாங்கி நன்
உடன்சேர்த்த மருந்து அணுப் பலமாய் வாங்கி
செப்பவே பெருங்காயம் வராகன் பத்து
சேரவே பொடித்து அந்த எண்ணெய்தனிற் கலக்கி
திப்பாமல் அடுப்பேத்தி மெழுகுபதந் தன்னில்
தீயவான இருப்போட்டு வடித்து மைந்தா
அப்பாகேள் பதனமதாய் வைத்துக் கொண்டு
அதின்விபரம் சொல்லுகிறேன் மைந்தா கேளே. 886

கோளப்பா விளக்குமுள்ள மூணு நாளும்
கெணிதமுடன் படி அரைக்கால் வீதங் கொள்ளு
நாளப்பா மூன்றுநாள் கொண்ட போது
நலமில்லா சீதமொடு மலக்கட் டெல்லாம்
தாளப்பா கழன்றுவிடும் வாய்வு போகும்
திருவாத வயத்துவலி யுடனே நிற்கும்
ஆளப்பா மறுதீதம் யின்னை யன்னை
அரகரா கெற்பமது உண்டாம் பாரு
887.

பாரப்பா அலகத்தின் மேலே யின்னை
பக்குவமாய் செய்வோர்க்கு யென்னென்கிறீ
காரப்பா இருபத்தை தொண்டு பண்ணு
காயாதி கற்பமதை மாற்றி பாரு
ஆரப்பா உனக்கீடு ஆதி கற்பம்
அனுதினமும் நேசமுடனே பூசை பண்ணு
நீரப்பா செய்யாமல் மனதடங்கி நின்று
~~நின்று~~
விண்ணான கண்ணொளியை மேவிப் பாரு
888.

பாரப்பா பதிவத்தின் மதியோ டொங்கி
பாலகனே நவிபெருகி யெழுந்த சித்தும்
ஆரப்பா உனக்கீடு அமுர்தங் கொள்ளு
அன்பான பூரணத்தை அறிவான் பாரு
தேரப்பா யின்னுவைப் பதனம் பண்ணு
செகத்தோர்க்கு யிந்நூலைச் செப்ப வேண்டாம்
காரப்பா பன்னிரண்டு ஜீரை மைந்தா
கண்ணிமைக்குள் வைத்ததைநீ பதனம்
பண்ணே.
889.

குஷ்டத்துக்குப் பரங்கிப் பட்டைச் சூரணம்

பண்ணப்பா கரப்பானொடு குஷ்டந் தீர
பண்பொன்று சொல்லுகிறேன் மைந்தா கேளு
நண்ணப்பா பரங்கியுட பட்டை வாங்கி
நலமான பழச்சாற்றில் ஊறப் போட்டு
விண்ணப்பா நிழலிடவே உலரப் போட்டு
விசையாக யிப்படியே பத்துமுறை பண்ணு
திண்ணப்பா நன்றாக உலர்ந்த பின்பு
தாக்கிநன்றாய் யிடித்து வடித்துக் கட்டுவாயே. 890.

கட்டாக சிவனார்தன் வேம்பை வாங்கி
கண்டமதாய் நறுக்கிக் குழித்தைலம் வாங்கி
திட்டமாய்த் தயிலமதில் பட்டைத் தூளை
சேர்த்துநன்றாய் பிசைந்துருட்டி வைத்துக் கொண்டு
மட்டாக நெல்லிக்கா யளவு கொண்டால்
மாறாத கிரந்தியொடு சூலைப் புண்கள்
தொட்டவுடன் சுட்டுகின்ற குஷ்ட ரோகம்
சொறிசிரங்கு பெருஞ்சிரங்கு யின்னங் கேளே 891.

சொறி சிரங்குக்கு

கேளப்பா மேல்பத்து வெடிப்புவெடி வெள்ளை
கோரத் தேமலைப்பு சூக்கடைப் புடனே
தாளப்பா மேகத்தால் வந்ததொரு ரோகந்
தருகாமன் வாய்வுக்கு மிருபதுநாள் கொண்டால்
கோளப்பா ஒன்றுமில்லை முப்பூச் சேர்த்து
குணமாகக் கொண்டவுடன் குடலமிருந் தேகம்
நாளப்பா நாளுக்கு நாளாகத் தேகம்
நண்ணாக் காணுமடா நமனா டாதே 892.

நாடாம விண்ணமொரு தயிலஞ் சொல்வேன்
நலமான இங்காய்பால் படிதான் வாங்கி
வாடாமல் திரிசிஅரி தாரங் கெந்தி
வகைநன்றாத் தீர்க்காஞ்சி வாங்கி மைந்தா
தேடாமல் அரைத்துஅந்தப் பாலிலே கலக்கி
செம்மையுடன் சாத்தியெண்ணெய் திறமாய் வாங்கி
ஆடாமல் எண்ணெய்யினைப் பதனம் பண்ணி
அப்பனே முக்கிருவில் காஞ்சி சேரே
893

சேர்த்ததொரு எண்ணெய்தனை வைத்துக் கொண்டு
தேகமதில் தான்தடவி சாயங் காலம்
பாத்தல்லோ அரைப்பிட்டுக் குளித்தா யானால்
பறக்குமடா சொறிசிரங்கு பரங்கிக் கிட்டம்
மாத்திரமேல் பத்து வெள்ளை வெண்டுகள்
மாறுமடா அதனினொரு வயனஞ் கேளு
காத்தல்லோ மொருங்கோ ருண்டு மைந்தா
காசினிதான் உண்டிடவே காமம் போமே
894

போமப்பா மனவெங்கள் போவ தற்கு
புகலுகிறேன் புலத்தியனே நன்றாய்க் கேளு
நாமப்பா வெளமதை பழுத்தின் சாத்தான்
நன்றாக முன்னாறு நாளூற வைத்து
தாமப்பா மாறுநாளதான் அவித்துப் போடு
சிண்டானை நஞ்சதுவ மத்துப் போகும்
ஆமப்பா பருப்பெடுத்துக் காயப் போட்டு
அப்பனே நன்றாக அரைத்து வைப்பையே.
895

லிங்கக் குழம்பு.

ஐயப்பா லிங்கமொரு விராகன் வாங்கி
வாங்கடா அதுக்கிரட்டி பொரிகாரந்தான்
மெய்யப்பா அதுக்கிரட்டி வாளஞ் சேரு
வீரமுடன் அதுக்கிரட்டி விபரங் சேரு
செய்யப்பா ஆமணக்கிப் பருப்புக் கூட்டி
திறமாகத் தானரைக்கும் போதில் மைந்தா
கையப்பா திறத்துடனே அரைக்கும் போதில்
கருவான முப்பூவின் விராகன் சேரே.
896

சேர்த்தல்லோ அரைத்துருண்டாய் வழித்து மைந்தா
திறமாகக் கிழித்தனிலே பதனம் பண்ணி
பார்த்தல்லோ குன்றியிடை யீய்ந்தால் மைந்தா
பக்குவமாய் மலசலங்கள் கழன்று போகும்
காத்தல்லோ பேதியது மீறித் தானால்
கடுகவே மோருஞ்சோ றுண்ணத் தீரும்
ஆத்தநீ நனைபோட்ட வாறு போல
அடைக்குமடா மோருடைய ஆண்மை தானே.
897

காரக் குழம்பு.

தானென்ற யின்னமொரு பேதி சொல்வேன்
தயவான நவச்சாரம் பலமோ வாங்கி
நானென்ற கொடிக்கள்ளிப் பாலில் ஆட்டி
நன்றாகக் கல்வத்தில் மைபோ லாட்டி
தானென்ற கிழித்தனிலே பதனம் பண்ணி
தப்பாமல் குன்றியிடைத் தயவாய்க் கொண்டால்
உள்ளென்ற மலக்கட்டு சலக்கட் டெல்லாம்
ஒழியுமடா அதன்பிறகு பொறுக்கா நின்றால்.
898.

பொறுக்காதே மயங்கின்றான் மைந்தா மைந்தா
பொக்கணமே நிற்பதற்கு விபரங் கேளு
மறுக்காதே எழுமிச்சம் பழத்தைத் தின்றால்
மாறிக்கிடுமடா பேதித்தனை வளமைம் பாரு
திறுக்காதே பெருவாய்வுக் கட்டுதல் — பாரு
திடமோ தரணையும் நீராம்பி லோடு
உருகாதே உருகின்ன சுவக்கட் டோசு
உன்வினைகள் தீருமடா அண்மை தானே
899.

அகத்தியர் குழம்பு.

உண்மையாம் நம்முடைய குழம்பைக் கேளு
உறுதியுள்ள பெருங்காயம் இந்துப் போடு
திண்மையுள்ள கடுகு ரோகிணியுங் கூட்டு
தியவான நசுகுடனே காரங் கூட்டு
நுண்மையுள்ள நாவிழுகு இவையுந் தாரம்
நல்லசருக் கீரகமும் திப்பிலியுஞ் சேர்த்து
வண்மையுடன் துகைபார்க்க பத்து மாசா
வரிசையுடன் சரியெடையாய் வாங்கிக் கொள்ளே
900

வாங்கியதோர் மருந்துக்கு யிடைதான் வாணம்
வளமாக அதுக்குத்தான் புழ்ச்சை சேர்த்து
பாங்குடனே கள்வத்தி விட்டுக் கொண்டு
பக்குவமா யீநாறு சாம மாட்டு
தீங்கின்னா முப்பூவும் பத்துக் கொண்டு
சேர்த்துநீ திறமாக சாம மாட்டு
சாங்கமாய் மருந்துக்கும் போதின் மைந்தா
தயிருடனே சோறுண்டு தியவா யாட்டே
901.

ஆட்டிநன்றாய் வழித்தெடுத்து மேதிக் கொம்பு
அடைவான சிமிழ்தனிலே பதனம் பண்ணி
நாட்டிலே மானிடர்க்கு வருநோய்க் கெல்லாம்
நலமான அனுபான மறிந்து செய்தால்
வாட்டமுடன் ஓடுமடா மைந்தா கேளு
மகத்தான வித்தையடா குழம்பின் மார்க்கம்
தேட்டிலே இக்குழம்பைத் தேடிக் கொண்டு
திருசிவா நம்முடைய பேர்வைத் தாரே.
902

பேர்வைத்தா ரென்றாலோ மைந்தா கேளு
பெருமையுள்ள சித்தரெல்லாம் போதனைகள் கூடி
நேர்வைத்த மருந்தாகக் குறிப்பைக் கண்டு
நேர்மையுள்ள அகத்தீசர் குழம்பென் றார்கள்
பார்வைத்த அகத்தீசர் பண்பறிந்தோர் மைந்தா
பகர்ந்திட்டோர் குழம்புறுதி அறிவா யப்பா
ஊர்வைத்த குழம்புறுதி யென்ன வென்றால்
இணமான பச்சையடா அயரு மாச்சே.
903

உயரான பச்சைதனை யறிந்து கொண்டு
உண்மையாய் நம்முடைய குழம்பு பண்ணி
பயிரான மானிடர்க்கு வருநோய் கண்டு
பாச்சுகின்ற பதுமைக்குப் பகரு*வேண்—
டோர்
துயரான ரோகத்துக்குச் சுரங்கள் கண்டால்
அகமாக மிஞ்சினதே சுரகம் பண்ணி
உயரான குழம்பினுக்குப் பண்விதைதான் காத்து
வரிசையாய்க் கொடுத்தவுடன் பேதி யாமே.
904

ஆமப்பா பேதியாகும் போதில் மைந்தா
அணுகிநின்ற அரமணைத்து மகண்டு போகும்
தாமப்பா சோறுபொங்கி வெந்நீர் விட்டு
தாகமது தாணடாங்க இடைக்கச் சொல்லு
ஆமப்பா சொல்லுகிறோம் பத்திய மின்னை
நன்மையில்லாத் தோஷமது நாடித் தானன்
போமப்பா கடுகளவு கண்ணில் போட்டு
புரிச்சுடன் நாவினிலே தீர்த்து வாரயே. 905.

தீர்த்திநின்றாய் கண்ணிலிட்டான் முழித்துப் பார்ப்பான்
திறமான நாவரட்சி வாட்டும் போகும்
பார்த்துநின்றாய் பசடனே பிணியுந்தீர்
பருக்குடன் செய்துவந்தால் பலனாம் மைந்தா
காத்துமிக்க கருவறிந்து இனத்தைக் கண்டு
காரறிந்து மேனி கர்மம் போக்கி
பார்த்துநின்றாய் மருந்துமிகச் செய்தா யானால்
பூலோக நாச்சிறி யாவாய் பாரே. 906.

பாரப்பா பிணைவழுத வைசூரியாதிக் கென்னம்
பண்பாக அமிர்தான் இழைத்துப் பூசு
நேரப்பா நெணமெல்லாம் தீரும் தீரும்
நேர்மையுடன் புண்ணிதமாய் புண்கள் தீரும்
சோரப்பா விஷமனைத்து போக வேண்டித்
கடுகளவு கண்ணிலிட அணைா தோரும்
ஆரப்பா வரியவனுக்கி சிறுபாகன் ஆத்தின்
தன்மையுடன் தான்கிழைத்துக் கண்ணில் தீர்த்தே. 907.

தித்தியே கடிவாயாள் பூசிப் பாரு
செம்மையுடன் விளைந்திருந் தீர்த்தா னய்யா
போத்தியே சிலவிழைங்க ளனைத்தும் போக
புதுமையுடன் திருநீரின் செறுக வாங்கிப்
பாத்துமே அடுகளை வளைத்துக் கொண்டன்
பாக்கிமோ சிலவிழைங்க ளனைத்து மைந்தா
காத்துமே வயித்தியமா யிருத்தின் மைந்தா
கருவான வயித்தியத்தைக் கருதி னேனே. 908

நூல்களின் விபரம்.

கருதினேன் சௌமிய சாகரத்தின் மைந்தா
கருவான வழலைமுதல் சுத்திக் கெல்லாம்
உறுதியாய் வேர்வகையும் மாரணமுஞ் சொன்னேன்
உண்மையுள்ள சுத்துருவ மித்திருவுஞ் சொன்ன
பருதியெனும் பஸ்பமுதல் சுண்ணமொடு கிரிகை
பாங்கான தாரணமுட யோகஞ் சொன்னேன்
அந்தியாக சகல சாஸ்திரங் களுக்கு
ஆணி சூத்திரமா யடக்கி னேனே. 909

~~[illegible]~~

அடக்கினேன் அவையடக்க மிந்த நூலை
அடக்கமென்ற பொருளெல்லா மிதிலே சொன்-னேன்
விடக்கொடுத்த நாய்போலே வாய்வீண் பேசி
மேதினியில் வனைதுசிறும் வைத்துப் போகும்
முடக்கமில்லை பூரணியா ளிட்ட சாபம்
மொழிதவறி அனுபவளவு வெளியில் போட்டால்
நடக்குமிது வாதியது காணா தோடும்
நடப்பறிந்து வாகினையறி கட்டு கட்டே. 910

கட்டாக பூரணை வைத்தியந்தா னப்பா
அருதிமேனன் னானாத்தின் ஆதி யந்தம்
திட்டமாய் பாற்பவனைக் செந்தூ ரங்கள்
திடமான லேகியங்கள் கூடே ரணங்கள்
சட்டமாய் கற்சவகை ரசாய னங்கள்
சாந்தமாய் கிஷாயவகை குடிநீர் போக்கு
மட்டாக தயலமுதல் மாத்திரைக ளெல்லாம்
மார்க்கமுடன் அனுபமதாய் வசனித் தேனே.
911

வசனித்த வைத்திய பூரணத்தைக் கண்டால்
வாயுபோத்தும் நோய்களெல்லாம் மைந்தா மைந்தா
நிசனித்த யாருனைச் சித்தர் கூட
நெய்க் கைதோறும் ஒளித்தா ரய்யா
நிசனித்து வாதாடி நூலை வாங்கி
நெகத்திலே நல்லோர்க்கு யீய்ந்தே னப்பா
அசனித்த மனங்குவிந்த சாறு போல
அன்பான வயித்தியத்தை அளித்திட் டாரே
912

பார்க்கயிலே வயித்தில் ஜெதுத்தா னாகில்
பரிசுடனே முப்பூவின் விபரங் கேளு
சேர்க்கையு அடுமுறையைச் சொன்னா னாகில்
செம்மையுடன் அவர்களுடன் பேசு பேசு
மார்க்கமுள்ள வகைத்தனையே அறியே னென்றால்
மார்பிலே அணைந்தவனை அகனத் தின்று
தீர்க்கமுடன் வாதிவந்த யெதிர்த்தா னாகில்
திறமாக சிரக்கிவைக்கை கட்டைக் கேளே
913

கோப்பா கட்டுவகை அருமைச் சொன்னான்
திருமைபயுடன் அவர்களிட கேள்வி பேசு
ஆசைப்பா ஆதியந்த மாறியே சென்றான்
அதட்டியே வஞ்சித்தின்க் கிட்டிப் போடு
கோப்பா இறியாறியா ரித்தில் ~~[illegible]~~ நாகும்
கூடாதே கூடினதாலத் தோஷ முண்டு
நாப்பா நாணிவந்து யெதுத்தானாக்கினாகில்
நன்றாய் மணந்தானே யெங்கே யென்னை
914

யெங்கேயென்று கேட்டவுடன் உன்னில் பாய்ந்தான்
யன்புடன் அவர்களிட மிருந்து லகும்
மாங்கியவன் முதிகெட்டுப் போனா னாகில்
மார்புதனில் வேயணைந்துக் கண்ணின்க் இந்து
வாங்கியென்ற பயகளிடம் பேச வேண்டாம்
வணங்கிமிக வந்தாவும் மகனைத் தின்று
திருக்கமென்ற யோகிவந்து யெதுத்தா னாகில்
திவசிவா முன்னத்துக் இருதி கேளே
915

கேட்கையிலே கைமுறையாய்ச் சொன்னா னாகில்
கிருமைபயுடன் அவனிடத்தில் கேள்வி கேளு
வாழ்க்கையுடன் ஆதியென்று சொன்னா னாகில்
வலுவாக வாய்தனிலே அறைந்து தின்று
ஆன்க்கையுள்ள கைவனிவந்து யெதுத்தா னாகில்
அடவான சாதனைக்கு அருமைக் கேளு
வேன்க்கையுள்ள சாதனைக்கு விதையைச் சொன்-
னான்
வேண்டியே வனிடத்தில் தொண்டு பண்ணே
916

பண்ணப்பா சாரணைதன் முறையின் னாட்டமாய்
பாதரசந் தன்னையே படைத்துத் தின்று
கண்ணப்பா கண்ணறியா புண்ணார் வெத்த
கவடமுள்ள வேடமதைக் கருத்தாய்ப் பூண்டு
விண்ணப்பா அறியாத சித்திக் கோடி
வீணருடன் பேசாதே யிருந்து கொண்டு
தண்ணப்பா தன்னிலை தானே கொண்டு
சமத்தாக பூரணத்தின் திறமாய் நில்லே. 917.

அஞ்சண்ணக் குகை.

திறமான அஞ்சண்ணக் குகையைக் கேளு
தீர்க்கமுள்ள கடல்நுரைதான் பலமே வாங்கி
உரமான கருவாலே அரைத்து ஊதி
உத்தமனே மாண்பயின்பு கல்லுப்புக் கூட்டி
மறவாமல் கருவாலே அரைத்து ஊதி
மார்க்கமுள்ள வெடியுப்புக் கூடச் சேர்த்து
நிறையா கருவாலே அரைத்து ஊதி
நிச்சயமாய்த் தானெடுத்துச் சொன்னக் கேளே. 918.

கேளப்பா சீனமுடன் சீனக் கூட்டி
கெணிதமுள்ள கருவாலே அரைத்துக் கொண்டு
மாளப்பா மிகவரைத்து வட்டுப் பண்ணி
மார்க்கமுடன் காயவைத்து ஓடு மூடி
தீளப்பா மண்சீலை வலுவாய்ச் செய்து
தன்மையுடன் புடம்போடக் கண்ணை மாகும்
ஆளப்பா அஞ்சினமும் ஒன்றாய்க் கூட்டி
அரகராய் அண்ணாம்பாய் நீறிப் போச்சே. 919.

போச்சப்பா நீறின சுண்ணாம்பை மைந்தா
புகழான கருவூரார் இதைத்தான் பண்ணி
நீச்சப்பா யிக்கைதான் பஞ்ச பூதம்
நிறையான அந்தச்சுண்ண இதையு மச்சி
வாச்சப்பா வாதமுஞ்சும் இதையைக் கண்டால்
மத்தான சரக்கெல்லாம் நடுங்கிச் சாகும்
காச்சப்பா காச்சிட்டு இதையை மைந்தா
கடுங்காரச் சுண்ணாம்பாய் நீறிப் போச்சே
௯௨௰

நீறிப்போ மிதைவிட்டால் சுண்ணாப் போக்கு
நிறையாத அந்தச்சுண்ணக் கிதையை விட்டால்
தேறிப்போய் இதமது திறமாய் நீறும்
திறமான பொன்னீறும் வெள்ளி நீறும்
கூறிப்போம் உபரசங்கள் எல்லாம் நீறும்
இணமான நாதவிந்து இணமாய் நீறும்
ஆறிப்போம் காரமுதல் சாரிசி நீறும
அப்பனே உப்போடு எல்லாம் நீறே
௯௨௧

நீத்துவ·கைக்கிது விட்டால் சுண்ணாம் பின்னை
நிறையாக யாத்துமுறைப் படியே பண்ணு
மாதுவகைக் கிதுவிட்டால் சுண்ண மாகா
மக்களே கரிச்சட்டும் போள வேண்டாம்
தேத்திரியே மனதடங்கி அறிவில் நின்று
திறமாக பதறாமல் வாதம் பார்த்தால்
நேத்தியுள்ள பூரணமாய்க் காண லாகும்
நிறையாத வகைவிபரம் நீதான் கேளே
௯௨௨

கேளப்பா பங்குனி சித்திரையி லின்னோ
தென்திருமுன்னை முப்பூவுக் குறுதி யாகும்
வானப்பா தைமாசி ரெண்டுக் கின்னோ
மகாய்த்தான செயநீருக் குறுதி யாகும்
நானப்பா ஐப்பசியுங் கார்த்திகையி லுன்னோ
நலமான உருக்கினத்தை ஆடிப் பாரு
தானப்பா ஆடியுட ஆவணியி லுன்னோ
தவறாமல் திராவகத்தைத் தயவாய்ப் பாரு. 923

பாரப்பா வைகாசி ஆனி ரெண்டில்
பரவாமல் சுருணையைத் தீர்த்து தீர்த்து
நேரப்பா புரட்டாசி மார்கழியின் ரெண்டில்
நிறையான செந்தூரம் நினைவாய்ப் பண்ணு
காரப்பா பன்னிரண்டுஞ் சரியாய்ச் சொன்னேன்
கட்டாகப் பன்னிரெண்டு மாதைப் பார்த்து
தேரப்பாத் தொழில்முறையைத் தேர்ந்து பாரு
திறமாகத் தொழில்முறையைச் சொல்லக் கேளே. 924.

கேளப்பா சிவக்காரம் வாங்கும் ரெண்டும்
கெதிப்பின் அருக்கக் கணித மில்லை
மானப்பா கெந்தகமுங் கூதம் என்ன பண்ணா
மகாத்தான செந்தூர மார்க்கம் போச்சு
தேறப்பா வெடியுப்பு சீனம் போனால்
திராவகத்தின் நேர்மை யெறியும் பாரே.!!

இலக்கண ~~பிழை~~ பிழை வழுவினை சரிபார்த்து, புத்தகத்தினை
இப்பொழுதுடன் அச்சுக்கு அனுப்பலாம்

[illegible]
10/12/97
தனி அலுவலர்